இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 21-07-2023

INDIA வை உருவாக்கிய MKS

இந்தியாவுக்கு எதிராக மோடி இருப்பதால், மோடிக்கு எதிராக INDIA அணி திரள்கிறது! நாட்டை நாசமாக்கிய பா.ஜ.க. கூட்டத்துக்கு எதிராக இந்தியா முழுவதும் அணி சேர்ந்துள்ள 26 கட்சிகளின் கூட்டணிக்கு Indian national developmental inclusive alliance - என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இப்படி ஒரு கூட்டணியை இந்தியா முழுமைக்கும் உருவாக்க அயராது பாடுபட்டவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். மார்ச் 1-ஆம் நாள் சென்னையில் நடந்த தனது பிறந்த நாள் பொதுக்கூட்டத்தில் பேசும் போது இதற்கான பாதையை வகுத்துக் கொடுத்தார். காஷ்மீரத்து சிங்கம் பரூக் அப்துல்லா அவர்களும், பீகார் மாநிலத்தின் துணை முதலமைச்சர் தேஜஸ்வீ அவர்களும், உத்தரப்பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் அவர்களும் அந்த மேடையில் இருந்தார்கள். பா.ஜ.க.வை வீழ்த்த நினைக்கும் அரசியல் கட்சிகள் எத்தகைய முடிவுக்கு வந்தாக வேண்டும் என்பதை மார்ச் 1 - ஆம் நாளன்றே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள்.

“2024 நாடாளுமன்றத் தேர்தல் என்பது யார் ஆட்சி அமைக்க வேண்டும் என்பதற்கான தேர்தல் அல்ல, யார் ஆட்சி அமைத்துவிடக் கூடாது என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல் ஆகும்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள்.

“ஒன்றுபட்ட இந்தியாவை வகுப்புவாத பாசிசத்தால் பிளவுபடுத்தி - ஒற்றைத் தன்மை எதேச்சதிகார நாடாக மாற்ற நினைக்கும் பா.ஜ.க.வை அரசியல் ரீதியாக வீழ்த்தியாக வேண்டும் - அது ஒன்று தான் நம்முடைய ஒற்றை இலக்காக இருக்க வேண்டும். ஒற்றைத் தன்மை கொண்டதாக நாட்டை மாற்ற நினைக்கும் பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை இலக்கு கொண்டதாக பா.ஜ.க.வை எதிர்க்கும் அனைத்துக் கட்சிகளும் திட்டமிட்டு ஒன்று சேர வேண்டும். பா.ஜ.க.வை 2024 தேர்தலில் வீழ்த்த நினைக்கும் அனைவரும் ஒன்றாகச் சேர வேண்டும். அந்த ஒற்றுமை உணர்வு வந்துவிட்டாலே வெற்றி பெற்றுவிட்டோம் என்று சொல்லிவிடலாம்” என்று அறிவுறுத்தினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

“மாநிலங்களுக்குள் இருக்கும் அரசியல் வேறுபாட்டை வைத்து, தேசிய அரசியலைத் தீர்மானித்தால் இழப்பு நமக்குத் தான் என்பதை அனைத்துக் கட்சிகளும் உணர வேண்டும். இதனை காங்கிரசு உள்பட அனைத்துக் கட்சிகளுக்கும் சேர்த்தே நான் சொல்கிறேன். தமிழ் நாட்டில் கடந்த நான்காண்டு காலமாக நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றிருக்கிறோம் என்றால் அதற்கு இந்த ஒற்றுமை ஒன்றுதான் அந்த வெற்றிக்கு அடிப்படையாகும். இதனை 2021 ஆம் ஆண்டே சேலம் பொதுக்கூட்டத்தில் அருமைச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களை வைத்துச் சொன்னேன். தமிழ்நாட்டைப் போல ஒற்றுமையான கூட்டணியை அகில இந்தியா முழுமைக்கும் அமையுங்கள் என்று சொன்னேன்” என்பதைச் சொல்லிவிட்டு மிக மிக வெளிப்படையாக சில கருத்துகளை அப்போது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

பா.ஜ.க.வை எதிர்க்கும் சில கட்சிகள் காங்கிரசுடன் இணைந்து செயல்படத் தயங்கியது. இதனால் பயனில்லை என்பதையும் முதன் முதலாகச் சொன்னது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான்.

“அரசியல் கட்சிகள் தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளை மறந்து - விட்டுக் கொடுத்து - பா.ஜ.க.வுக்கு எதிராக ஒன்று சேர வேண்டும். அதே நேரத்தில் சிலரால் காங்கிரசு அல்லாத கட்சிகளின் கூட்டணி என்று சொல்லப்படும் வாதங்களையும் நிராகரிக்க வேண்டும். அது கரை சேராது. தேர்தலுக்குப் பிறகு கூட்டணி வைத்துக் கொள்கிறோம் - என்று சொல்வதும் நடைமுறைக்கு சரியாக வராது. இதனை பா.ஜ.க.வை எதிர்க்கும் கட்சிகள் அனைத்தும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்” - என்று வெளிப்படையாகவே முதலமைச்சர் அவர்கள் அப்போது சொன்னார்கள்.

பா.ஜ.க. - காங்கிரஸ் அல்லாத மூன்றாவது அணி முயற்சிகள் அனைத்துக்கும் அன்றைய தினமே முற்றுப்புள்ளி வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். மூன்றாவது அணி நோக்கத்துடன் தன்னைச் சந்தித்தவர்களிடமும் முதலமைச்சர் அவர்கள் இதனை வலியுறுத்தினார். ‘மூன்றாவது அணி என்பது பா.ஜ.க.வுக்கு சாதகமாகவே ஆகும்’ என்பதைச் சொன்னார். இதற்குப் பிறகுதான் மூன்றாவது அணி எண்ணத்தில் இருந்த சில தலைவர்கள் மனம் மாறினார்கள்.

காங்கிரஸையும் உள்ளடக்கிய கூட்டணியால் மட்டுமே பா.ஜ.க.வை வீழ்த்த முடியும் என்ற சிந்தனையை விதைத்தவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். மார்ச் 1 ஆம் தேதி போட்ட விதை என்பது சூலை 18 அன்று முளைத்திருக்கிறது. Indian national developmental inclusive alliance - என்பதாக முளைத்திருக்கிறது. INDIA வை உருவாக்கியவராக M.K.STALIN உயர்ந்து நிற்கிறார்.

இது நம்மை விட பிரதமர் நரேந்திரமோடிக்கு நன்கு தெரியும். அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் குறி வைக்கப்படுகிறது. அமலாக்கத்துறையை ஏவி விடுகிறார்கள். பெங்களூரு கிளம்பும் முன் ரெய்டு நடத்தினால் பயந்து விடுவார்கள் என்று கணக்குப் போடுகிறார்கள். பாட்னா கூட்டம் முடிந்ததும் மத்தியப்பிரதேசத்துக்குப் போன பிரதமர், அங்கும் தி.மு.க.வை தான் திட்டினார். பெங்களூரு கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது அந்தமான் விமான நிலைய புதிய முனையத்தை காணொளி மூலமாக தொடங்கி வைக்கும் போதும் தி.மு.க.வையே விமர்சித்தார். INDIA வை உருவாக்கியவர் M.K.S. என்பதை அவர் அறிவார். அதனால் தான் இந்தளவுக்கு வன்மம் கக்குகிறார்கள். அமலாக்கத் துறைகளை ஏவுகிறார்கள்.

‘அவர்களால் இன்னும் பல கொடுமைகள் நடக்கும்’ என்பதை எதிர்கொள்ளும் நெஞ்சுரத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். இத்தகைய கொடுமைகளுக்கான தண்டனைகளும் பா.ஜ.க.வுக்கு நிச்சயம் கிடைக்கும்.

புதுடெல்லி யமுனை ஆற்றில் மீண்டும் வெள்ளம்!

புதுடெல்லி, ஜூலை 21- டெல்லியில் பலத்த மழை பெய்ததால் யமுனை ஆற்றில் மீண்டும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. அணையின் நீர்மட்டம் 206.01 மீட்டராக அதிகரித்துள்ளது. யமுனை ஆற்றின் இரு கரைகளையும் தாண்டி வெள்ள நீர் செல்வதால் அபாய எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

இதற்கிடையே 45 ஆண்டுகளுக்கு பிறகு யமுனை ஆற்றின் வெள்ளம் தாஜ்மகாலுக்குள் புகுந்தது. தாஜ்மகால் வளாகத்தில் அமைந்துள்ள பூங்காவை மூழ்கடித்தபடி வெள்ளம் செல்கிறது. தாஜ்மகால் சுவரை தொட்டுக் கொண்டும் வெள்ள நீர் செல்கிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.07.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், தொழிலக மற்றும் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி மேற்கொண்டுவரும் SOL இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் 145 கோடி ரூபாய் முதலீட்டில் இராணிப்பேட்டை - சிப்காட் நிலை 3-ல் திரவ மருத்துவ மற்றும் தொழில் ஆக்சிஜன், திரவ நைட்ரஜன் மற்றும் திரவ ஆர்கான் (Liquid Argon) உற்பத்தியை மேற்கொள்ளுவதற்காக அதிநவீன ஒருங்கிணைப்பு ஆலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, SOL இந்தியா நிறுவனத்தின் தலைவர் குலியோ லாஃபுமாகாலி ரொமாரியோ மற்றும் இந்திய செயல்பாடுகளின் இயக்குநர் எஸ்.வி.வெங்கடேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அம்மன் கோயில்களுக்கு ஆன்மிகச் சுற்றுலா ஏற்பாடு

ஆளவந்தார் அறக்கட்டளை சொத்துகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜூலை 21- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு 18.7.2023 அன்று சென்னை, பாரிமுனை, காளிகாம்பாள் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறை, சுற்றுலாத்துறையுடன் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்துள்ள ஆடி மாத அம்மன் திருக்கோயில் ஆன்மிகச் சுற்றுலாவினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

2022 - 2023 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், கடந்தாண்டு ஆடி மாதம் பிரசித்த பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவத் திருக்கோயில்களுக்கும் சென்னை, திருச்சி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களைத் தலைமையிடமாக கொண்டு சுற்றுலாத்துறையுடன் இணைந்து ஆன்மிகச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டு பக்தர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டிற்கு ஆடி மாத அம்மன் திருக்கோயில்களுக்கு குறைந்த கட்டணத்தில் செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய கிழமைகளில் ஆன்மீக சுற்றுலா செல்ல விரும்புவர்களுக்கு ஏதுவாக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் இன்றைக்கு காளிகாம்பாள் திருக்கோயிலிலிருந்து 10 அம்மன் திருக்கோயில்களுக்கு புறப்பட்ட ஆன்மிகச் சுற்றுலாவில் 47 பக்தர்கள் பங்கேற்றுள்ளனர். அவர்களுக்கு சிறப்பு தரிசனம் செய்யப்பட்டு, திருக்கோயில் பிரசாதங்கள் மற்றும் மதிய உணவும் வழங்கப்படுகிறது.

சென்னையில் 2 பயணத் திட்டங்களாக ரூ.1,000/ மற்றும் ரூ.800/ ஆகிய கட்டணங் களில் இச்சுற்றுலா செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் ஒரேநாளில் பல்வேறு அம்மன் திருக்கோயில்களுக்கு சென்று பக்தர்கள் இறை தரிசனம் செய்ய முடியும்.

ஆளவந்தார் அறக்கட்டளையின் சொத்துக்களை பொறுத்தளவில் இதுவரை எந்த ஒரு தனியாருக்கும் தரப்படவில்லை. அந்த இடத்தின் ஒரு பகுதி சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் கற்று வாரியத்தின் குடிநீர் திட்டத்திற்கு வழங்கப்பட்டு, அதற்கான நிலுவைத் தொகை ரூ.10 கோடியை இந்த ஆட்சி வந்த பிறகு தான் வசூலித்து அறக்கட்டளைக்கு செலுத்தப்பட்டுள்ளது. அதேபோல் ஆளவந்தார் திருவரசை மேம்படுத்த ரூ.1 கோடியும், அறக்கட்டளை சார்பில் பாடசாலை நிறுவுவதற்கு ரூ.1 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆளவந்தாரின் உயிலில் குறிப்பிட்டுள்ளபடி தலசயன பெருமாள் திருக்கோயில் மற்றும் திருவிடந்தை, நித்திய கல்யாண பெருமாள் திருக்கோயிலுக்கு தேவையான அனைத்து நித்தியப் பணிகளும் செய்யப்பட்டு வருகின்றன. அத்திருக்கோயில்களில் திருப்பணிகளும் நடைபெற்று வருகின்றன. ஆளவந்தாரின் சொத்துக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை இந்து சமய அறநிலையத் துறை எடுத்து வருவதோடு, அவற்றை பாதுகாக்கும் வகையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கின்ற பணியும் நடைபெற்று வருகிறது. ஆளவந்தாரின் நோக்கங்களுக்கு எதிராக எந்த விதமான நடவடிக்கையும் இதுவரையில் அரசு எடுக்கவில்லை என்பதை ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரை 866 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளன. ரூ.4764 கோடி மதிப்பிலான 5,080 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. திருக்கோயிலுக்கு சொந்தமான இது வரை 1.25 லட்சம் ஏக்கர் நிலங்கள் ரோவர் கருவியின் வாயிலாக அளவீடு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆகவே, திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் இறை சொத்து இறைவனுக்கே என்ற வகையில் அந்த சொத்துக்களை பாதுகாப்பது, அவை எந்த நோக்கத்திற்காக திருக்கோயில்களுக்கு எழுதி வைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்ற பணியில் இந்து சமய அறநிலையத்துறை தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றது.

”HRCE” எனும் கைபேசி செயலியினை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்படுத்த வற்புறுத்தப்படவில்லை. அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்கள் அந்தந்த திருக்கோயிலில் பணியில் இருப்பதற்கு அது ஒரு சான்றாக அமைகின்றது. பலர் விருப்பத்தோடு அதில் பதிவேற்றம் செய்திருக்கிறார்கள். ஒரு சிலர் அதற்குண்டான வசதிகள் கொண்ட கைபேசி இல்லை என்று தெரிவித்திருக்கின்றார்கள். இது அவர்களின் கடமை என்று நாங்கள் கருதுகிறோம். அதேபோல் இந்த காரணத்திற்காக இதுவரை யாரையும் பணியிட மாற்றம் செய்யப்படவில்லை. இருந்தாலும் தொடர்ந்து இந்த பதிவேற்றத்தில் அவர்களும் இடம் பெற வேண்டும் என்பது இந்து சமய அறநிலையத்துறை நிலைப்பாடு. அதை தொடர்ச்சியாக படிப்படியாக செய்வதற்குண்டான முயற்சிகளை, வசதிகளை ஏற்படுத்தித் தருவோம்.

இந்த அரசு பொறுப்பேற்றபின் 80 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த திருவண்ணாமலை, தென்முடியனூர், முத்துமாரியம்மன் திருக்கோயில், 12 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டிருந்த மதுரை கள்ளிக்குடி வாலகுருநாத சுவாமி திருக்கோயில், சேலம் மாவட்டம், திருமலைகிரி மற்றும் வடகுமரை மாரியம்மன் திருக்கோயில் உள்ளிட்ட 11 திருக்கோயில்கள் பக்தர்கள் தரிசனத்துக்கு திறக்கப்பட்டுள்ளன.

12 ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்த அலுவலர்களின் பதவி உயர்வு இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கில் இதரப் பினரையும் அழைத்து பேசி சமரசப்படுத்தி இதுவரையில் 140 அலுவலர்களுக்கு பதவி உயர்வு அளித்திருக்கின்றோம். துறை சார்ந்த ஊழியர்களை எல்லா வகையிலும் பாதுகாப்பது இந்து சமய அறநிலையத்துறையின் கடமையாகும். அதே வேளையில் தவறுகள் நடப்பின் அதன் மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு நாங்கள் பொறுப்பாக முடியாது.

வியாசர்பாடி சாமியார் தோட்டம், கரபாத்திர சுவாமிகளின் சீடராக இருந்த சுவாமி சகஜானந்தாவின் நினைவை போற்றும் வகையில் அப்பகுதியில் உள்ள சாலைக்கு அவரது பெயரை சூட்டுவது குறித்த கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் அர்ச்சகர் மற்றும் ஓதுவார் பயிற்சி பள்ளிகளுக்கு கடந்தாண்டு 220 பேர் பயிற்சி பெற்றார்கள். இந்தாண்டு மாணவர் சேர்க்கைக்கு அதிக எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பயிற்சியில் சேர்வார்கள் என்பதால் அனைத்து அடிப்படை வசதிகளையும் பயிற்சி பள்ளிகளுக்கு ஏற்படுத்தி தர உத்தரவிடப்பட்டுள்ளது.

அமைச்சர் பொன்முடி மீதான அமலாக்கத்துறை சோதனையை பொறுத்த வரை தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று கூறிய அதே கருத்தை தான் நானும் கூறுகிறேன். ஏற்கனவே ஆளுநர் திமுக அரசுக்கு எதிராக பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார். அதேபோல் அமலாக்கத்துறையும், அந்த பிரச்சார அணியிலே இணைந்து இருக்கின்றது. சட்டப்படி அதை எதிர்கொள்ளுகின்ற வல்லமை அமைச்சர் பொன்முடி அவர்களுக்கு உண்டு. இது போன்ற ரெய்டுகளுக்கும், மிரட்டல் உருட்டல்களுக்கும் திராவிட முன்னேற்ற கழகம் எந்நாளும் பணியாது.

தொடர்ந்து முன்பை விட வேகமாக தன்னுடைய அரசியல் நடவடிக்கைகளில் திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கும். எங்களை இது போன்ற பிரச்சினைகள் இருந்து காப்பதற்கு கழக தலைவர் முதலமைச்சர் உறுதியாக இருக்கின்றார். தலைவர் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆற்றுகின்ற பணிகளுக்கும் மென்மேலும் வழி செய்கின்ற வகையில் எங்களுடைய பணி அமையும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன், திருமதி கி.ரேணுகா தேவி, திருமதி ஜ.முல்லை, உதவி ஆணையர் எம்.பாஸ்கரன், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் எஸ்.சர்வேஸ்வரன், அறங்காவலர் கள் கே.யுவராஜ், எஸ். மோகன், ஆர்.சுப்பிரமணி, காளிதாஸ் சிவாச்சாரியார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வாழ்த்துரை!

அறந்தாங்கி நகர தி.மு.க. சார்பில் மாபெரும் பட்டிமன்றம்!

திண்டுக்கல் ஐ.லியோனி நடுவராக கொண்டு நடைபெறுகிறது!

புதுக்கோட்டை, ஜூலை 21 - புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மாபெரும் பட்டிமன்றம் இன்று (21.07.2023 வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் அறந்தாங்கி வ.உ.சி. திடலில் நடைபெறுகிறது.

அறந்தாங்கி நகரச் செயலாளர் க.இராஜேந்திரன் அனைவரையும் வரவேற்கிறார்.

சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரகுபதி தலைமை தாங்குகிறார். தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் - கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி நடுவராகவும், “திராவிட மாடல் ஆட்சிக்கு பெரிதும் வழிகாட்டுவது டாக்டர் கலைஞரின் கலைப்பணியே” எனும் தலைப்பில் பேராசிரியர் விஜயகுமார், கவிஞர் ஹரி பாலகிருஷ்ணன் ஆகியோரும், “அரசியல் பணியே” எனும் தலைப்பில் கவிஞர் இனியவன், மதுரை சங்கர் ஆகியோரும் பேசுகின்றனர்.

காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வாழ்த்துரை வழங்குகிறார்.

உதயம் சண்முகம், இரா. ஆனந்த், வே.பொன்துரை, பொன். கணேசன், சக்தி ராமசாமி, எஸ்.எம்.சீனியார், ஆர்.ஆர்.கே.கலைமணி, த.மணி ராஜன், தி.முத்து ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட, ஒன்றிய , நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

இறுதியில் சோம.ஆறுமுகம், இரா.அடைக்கலராஜா ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் நீலமங்கலம் ஏ.கே.டி பள்ளி கூட்டரங்கில், நேற்று முன்தினம் (19.07.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நான் முதல்வன் திட்டம் குறித்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார். உடன் பொதுப்பணித்துறை (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள், சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஷ்ரவன் குமார், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ.இன்னசென்ட திவ்யா, சிறப்பு திட்ட அமலாக்கத்துறை செயலாளர் மரு.தரேஸ் அகமது, ஆகியோர் உள்ளனர்.